**கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2002 இன் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவக விதப்புரையின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 வருடம் 18 வருடங்கள் வரையான காலத்திற்குரிய வேலையை விட்டுச்சென்ற பிணைமுறியை மீறிய மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5,386,649 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | ஒரு விரிவுரையாளரிடமிருந்து அறவிடுவதற்கு உள்ள பணம் அடுத்த வழக்குத் தவணையின் போது சமரசத்திற்கு வருவதற்கும், இன்னுமொரு விரிவுரையாளர் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளில் மீதியை அறவிடுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மற்றைய விரிவுரையாளரிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து அறவிடுவதற்குரிய ஆவணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | விரைவாக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான பழைய ரூபா 564,390 கூட்டுத்தொகையான 06 கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | விரைவாக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 5,612,400 கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் மின்சாரத்திற்கான ஒதுக்கீடுகள் ரூபா 1,342,332 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு தவறியிருந்தது. | இது தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். மின்சாரத்திற்கான ஒதுக்கீடு கொழும்பு பல்கலைக்கழகம் ஊடாக பெறப்பட்ட மின்சார வழங்களுக்காக இருந்ததுடன் அந்த கொடுப்பனவுகள் முடிவடைந்தமையினால் இந்த ஒதுக்கீட்டை பேரேட்டில் இருந்து அகற்றுவதற்கு 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 99(1) ஆம் பிரிவு | நிறுவகத்தின் பேரில் நிதியமொன்று ஸ்தாபிக்கப்படாமையால் பாடநெறி மற்றும் செயற்திட்ட வருமானத்தின் பங்களிப்பு ரூபா 73,528,706 நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் நிறுவகத்தின் செயற்பாடுகளில் செலவிடப்பட்டிருந்தது. | ஆண்டில் போதியளவான நிதிஏற்பாடு கிடைக்காமையினால் நிறுவகத்தின் மீண்டெழும் செவினங்கள் மற்றும் மூலதன செலவினங்களுக்காக முழுமையாகச் செலவிடப்பட்டுள்ளதுடன் தற்போது நிறுவகத்தில் நிதியம் ஒன்று காணப்படாமையால் எதிர்காலத்தில் அவ்வாறான நிதியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் அதன் ஊடாக செலவினங்களைச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2019 யூலை 25 ஆம் திகதிய | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடு இன்றி 2014 ஆம் ஆண்டு முதல் 2022 திசம்பர் 31 வரையான காலத்தில் | எதிர்வரும் செயற்றிட்டங்களின் போது வெளிநாட்டு மானியங்களாக பெறப்படும் போது கட்டாயமாக வெளிநாட்டு வளங்கள் | சுற்றறிக்கை ஆலோசனைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்கம் SC&PMU/Grant/19 என்ற வெளிநாட்டு வளத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 47,383,610 வெளிநாட்டு மானியம் நிறுவனத்திற்கு நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு அது தொடர்பாக நிறுவகத்தின் பதவியணியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதி விளைவுகள் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 228,129,845 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 183,370,199 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 44,759,646 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 51 சதவீத அளவு அரசாங்கத்தின் மானியங்களை உள்ளடக்கி இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் மானியம் 0.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் 125 சதவீதத்தினாலும், ஏனைய உள்ளக வருமானம் 111 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

**(அ) நடைமுறை விகிதம்**
கடந்த ஆண்டில் 10:1 ஆன நடைமுறை விகிதம் நடப்பாண்டில் 12:1 ஆக காணப்பட்டது.

**(ஆ) இலாப விகிதம்**
மீளாய்வாண்டின் மிகை ரூபா 228,129,845 ஆகவும் மொத்த வருமானம் ரூபா 903,641,278 ஆகவும் இருந்தமையால் இலாப விகிதம் 25 சதவீதம் ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டில் அந்த விகிதம் 23.5 சதவீதமாக காணப்பட்டது.